## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 12ம் நாள்
2026ம் வருடம் மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை

### ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 72/2021

### CNR. No.TNED07-000593-2021

அரசுக்காக
காவல் துறை ஆய்வாளர்,
சத்தியமங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண். 651/2019. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

ராஜ்குமார் (29/2019)
த/பெ.உதயகுமார்
49, சௌடாம்பிகை நகர்,
சாமிசெட்டி பாளையம்,
பெரியநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் ....எதிரி

**Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| | |
|---|---|
| Name of the Police Station and Cr No. | Sathyamangalam Police Station, Cr.No. 651/2019 |
| Accused Name | Rajkumar |
| Father / Husband Name | S/o. Udhayakumar |
| Occupation | Coolie |
| Address | 49, Sowdambikai Nagar, Samychetty palayam, Periyanaikenpalayam, Coimbatore |

| | |
|---|---|
| Age | 29/2019 |
| Occurrence | 18.11.2019 |
| Complainant | 30.11.2019 |
| Apprehension | 17.12.2019 |
| Released on Bail | 14.01.2020 |
| Commitment | Not Applicable |
| Commencement of trial | 23.09.2025 |
| Closure of trial | 23.03.2026 |
| Sentence or order | Acqittal |
| Service of Copy of Judgment an accused | Nil |
| Explanation of delay | Delayed by both side |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 28.04.2021ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பிரசாந்த்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கு சாட்சிகள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.651/2019 இ.த.ச.பிரிவுகள் 457, 380 ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. **<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

சத்தியமங்கலம் காவல்நிலைய சரகம், கொளிஞ்சானூர் பட்டத்தரசியம்மன்

கோயிலில் தண்டபானி என்பவர் அதன் பூசாரியாக இருந்து தினமும் மாலை 6.00 மணிக்கு கோயிலில் லைட் போட்டுவிட்டு காலை 06.00 மணிக்கு கோயிலுக்கு சென்று கோயிலில் உள்ள லைட்டுகளை அனைத்துவிட்டு வருவார் என்றும், மேற்படி கோயிலில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையும், அமாவாசை நாட்களிலும் பூஜை நடக்கும் என்றும், இந்நிலையில் மேற்படி தண்டபானி கடந்த 19.11.2019 ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணிக்கு பட்டத்தரசியம்மன் கோயிலில் லைட்டை ஆப் செய்வதற்காக சென்றுள்ளார். பட்டத்தரசியம்மன் கோயிலின் வெளிப்பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை பார்த்த தண்டபானி கொளிஞ்சானூரைச் சேர்ந்த பொதுமக்களுக்கு போன்மூலம் தகவல் சொல்லி பொதுமக்கள் வந்தவுடன் கோயிலுக்குள் சென்று பரர்த்தபோது பட்டத்தரசியம்மன் சாமியின் கழுத்தில் இருந்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கதாலி பொட்டு இரண்டை 18.11.2019 ம் தேதி இரவு யாரோ அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் கோயில் பூட்டை உடைத்து ரூ.5000/- மதிப்புள்ள சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க தாலிபொட்டை திருடி சென்றது தெரிந்துள்ளது என்றும், பின்னர் மேற்படி திருட்டு சம்மந்தமாக சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு மேற்படி திருட்டு சம்பவத்தை இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் செய்தது காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது என்பது அரசு தரப்பு வழக்காகும்.

3. இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்: 72/2021 ஆக பிடிகட்டளை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207 –ன் படி இலவசமாக வழங்கி ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு குற்றவாளி இல்லை என மறுத்து பதிலளித்தும், தனக்கு எதிரான குற்ற முகாந்திரங்களையும் மறுத்துரைத்ததால் எதிரி மீதான வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.<u>அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

கடந்த 2019ம் ஆண்டு இவ்வழக்கின் அ.சா.2 தண்டபாணி என்பவர் கொளிஞ்சானூரில் உள்ள பட்டத்தரசியம்மன் கோயிலில் பூசாரியாக வேலை பார்த்து வந்த போது ஒரு நாள் காலை கோவிலுக்கு சென்ற போது கோவிலின் சட்டரில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது என்றும், பின்னர் ஊர் நாட்டாமைக்கு தகவல் சொல்லி அ.சா.1 சுப்பன், அ.சா.3 ரங்கன், அ.சா.4 கருப்பன் என்ற செங்கோட்டையன் உட்பட ஊர் காரர்கள் வந்து பார்த்த போது சாமியின் கழுத்தில் இருந்த அரை பவுன் பொட்டு தாலி, தாலி கோர்த்திருந்த வெள்ளிக்கம்பி ஆகியவை காணாமல் போய் இருந்தது என்றும், இது சம்மந்தமாக அ.சா.1 சுப்பன் என்பவர் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார்மனு அளித்தார்.

6. மேற்படி புகார்மனுவினை பெற்றுக்கொண்ட சத்தியமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.7 அம்மாசை என்பவர் மேற்படி புகார் மனுவின் தன்மைக்கேற்ப சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 651/2019ன் கீழ் இ.த.ச பிரிவுகள் 457, 380 ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கையுடன் புகார்மனுவின் அசலை இணைத்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.7 சத்தியமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அம்மாசை என்பவர் கடந்த 30.11.2019 ம் தேதியன்று 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.5 சந்திரசேகரன் மற்றும் அ.சா.6 மாதேஷ்வரன்

ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தி பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரிவரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள அ.சா.6 மாதேஷ்வரன் என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சாட்சிகள் சுப்பன்,, தண்டபானி, ரங்கன், சரவணன், கருப்பன் என்ற செங்கோட்டையன், சந்திரசேகரன், மாதேஷ்வரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் மேற்படி திருட்டு சம்பவத்தை செய்த ராஜ்குமார் என்பவர் பவானிசாகர் காவல் நிலைய குற்ற எண்.230/2019 வழக்கில் சிறையில் இருப்பது தெரிய வரவே நீதிமன்றத்திற்கு PT Warrant கேட்டு வேண்டுகோள் கடிதம் அளித்தார். பின்னர் வழக்குகோப்புகளை தொடர்புலன்விசாரணைக்காக சத்தியமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் மோகன்ராஜ் என்பவர் பார்வைக்கு வைத்தார்.

7. மேற்படி சத்தியமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் மோகன்ராஜ் எதிரி ராஜ்குமார் என்பவரை கைது செய்து காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் எதிரி ராஜ்குமாரை போலிஸ் காவலில் கடந்த 19.12.2019ம் தேதியன்று எடுத்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா.5 சந்திரசேகரன், மணி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள அ.சா.5 சந்திரசேகரன் என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் 19.12.2019ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு எதிரி ராஜ்குமார் என்பவரின் பழைய வீட்டின் பக்கம் உள்ள ஆற்றுமுற்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த அ.சா.பொ.1 சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க பொட்டு இரண்டை சாட்சிகள் அ.சா.5 சந்திரசேகரன், மணி ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக அ.சா.5 சந்திரசேகரன் என்பவருடைய கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். பின்னர் சாட்சிகள் சந்திரசேகரன், மணி ஆகியோரைவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் கைப்பற்றிய சொத்தை அ.சா.ஆ.9 படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 457, 380ன்

கீழ் குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்தார் என்பது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களாகும்.

8. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என மறுத்து கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவித்து எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டணை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**11.தீர்வு**

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் அரசு தரப்பு இவ்வழக்கின் படி கடந்த 19.11.2019ம் தேதியன்று கொளிஞ்சானூர் பட்டத்தரசியம்மன் கோவிலின் பூசாரியான இவ்வழக்கின் அ.சா.2 தண்டபானி என்பவர்

காலை 06.00மணிக்கு கோயிலின் லைட்டை ஆப் செய்வதற்காக சென்ற போது மேற்படி பட்டத்தரசியம்மன் கோயிலின் வெளிப்பூட்டு உடைக்கப்பட்டிருந்தது என்றும், பின் ஊர் மக்களுக்கு தகவல் கூறி கோயிலுக்குள் சென்று பார்த்த போது பட்டத்தரசியம்மன் சாமியின் கழுத்திலிருந்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கத்தாலி பொட்டு இரண்டை 18.11.2019ம் தேதியன்று இரவு யாரோ அடையாளம் தெரியாத மர்மநபர்கள் திருடிச்சென்று விட்டார்கள் என்றும், பின்பு சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி திருட்டு குற்றத்தை புரிந்த நபர் பவானிசாகர் காவல் நிலைய குற்ற எண்.230/2019 வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் திருடியதாக இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சத்தியமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் மோகன்ராஜ் என்பவர் கண்டறிந்தார் என்பது இவ்வழக்காகும்.

12. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 புகார்தாரர் சுப்பன், அ.சா.2 தண்டபாணி, அ.சா.3 ரங்கன், அ.சா.4 கருப்பன் என்ற செங்கோட்டையன், அ.சா.6 மாதேஷ்வரன் ஆகியோர் இவ்வழக்கு திருட்டு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது. அவர்கள் அனைவரும் இவ்வழக்கு திருட்டுக்கு பின்பு கோவிலுக்கு சென்று பார்த்த நபர்கள் ஆவார்கள். அ.சா.7 அம்மாசை என்பவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.8 இளங்கோ என்பவர் சத்தியமங்கலம் காவல் நிலைய தற்போதைய காவல் துறை ஆய்வாளர் ஆவார். ஆகவே மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4, அ.சா.6, அ.சா.7, அ.சா.8 வரையயிலானவர்களுக்கு இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் தான் இவ்வழக்கில் கூறியுள்ள திருட்டு குற்றத்தை புரிந்ததாக மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கிடையாது. ஆகவே இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மோகன்ராஜ் என்பவர் இவ்வழக்கில் கூறியுள்ள திருட்டு குற்றத்தை இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் தான் புரிந்தார் என்பதற்காக இவ்வழக்கின் எதிரி சத்தியமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் மோகன்ராஜ் என்பவர் இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவரிடமிருந்து

சாட்சிகள் அ.சா.5 சந்திரசேகரன் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ராஜ்குமார் கூறிய தகவலின் அடிப்படையில் அ.சா.5 சந்திரசேகரன் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு திருட்டு சொத்துக்களின் மூலம் தெரியவந்ததாக இவ்வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. ஆகவே இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் தாமாக இவ்வழக்கு திருட்டு குற்றம் சம்மந்தமாக சாட்சிகள் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்த விபரத்தையும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தகவலின் அடிப்படையில் காவல் துறையினர் சாட்சிகள் முன்னிலையில் திருட்டு பொருள்களை கைப்பற்றப்பட்ட விபரத்தையும் இவ்வழக்கின் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் அரசு தரப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்திட்டுள்ள மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையெழுத்திட்டுள்ள மணி என்பவரை அவருடைய இறப்பின் காரணமாக இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சி கையெழுத்திட்டுள்ள சந்திரசேகரன் என்பவரை இவ்வழக்கின் அரசு தரப்பில் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆகவே அ.சா.5 சந்திரசேகரன் என்பவர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ராஜ்குமார் கூறிய தகவலின் அடிப்படையில் இவ்வழக்கு திருட்டு பொருட்களை காவல் துறையினர் கைப்பற்றியதாக கூறியுள்ளது குறித்து நிரூபணம் செய்யும் வகையில் சரிவர இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளாரா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் அ.சா.5 சந்திரசேகரன் என்பவர் தன்னுயை முதல்நிலை சாட்சியத்தில்

**1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து**

**வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
**2. கோயில் நகை திருடுபோனது சம்மந்தமாக காவல்துறை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள். ஒரு கையெழுத்தை ஸ்டேசனில் வைத்து எதிரியைப் பிடித்த பின்பு கையெழுத்து செய்தேன். மற்றொரு கையெழுத்தை புகார் மனு அளித்த பின்பு போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்று சாட்சியம் அளித்துள்ளார்.**

மேலும் அ.சா.5 சந்திரசேகரன் தன்னுடைய குறுக்குவிசாரணையில்

**என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள குற்ற ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையெழுத்திட்டதாக கூறும் அ.சா.5 சந்திரசேகரன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் தன்முன்பாக இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி காவல் துறை ஆய்வாளர் மோகன்ராஜ் என்பவர் முன்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ராஜ்குமார் கூறிய தகவலின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக இவ்வழக்கில் திருடுபோனதாக கூறும் காளியம்மன் கோயில் சாமி கழுத்தில் இருந்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கதாலி பொட்டு இரண்டை தன் முன்பு கைப்பற்றியதாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மோகன்ராஜ் என்பவர் இவ்வழக்கின் அ.சா.5 சந்திரசேகரன் என்பவர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவரிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், மேற்படி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கூறிய தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் திருட்டு பொருட்களான பட்டத்தரசியம்மன்

காளியம்மன் கோயில் சாமி கழுத்தில் இருந்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கதாலி பொட்டு இரண்டை காவல் துறையினர் கைப்பற்றியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை.

15. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரி ராஜ்குமார் என்பவர் இவ்வழக்கில் கூறியுள்ள திருட்டு சம்பவத்தை புரிந்ததற்கு காரணமாக உள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் பொருட்களை கைப்பற்றியது ஆகியவற்றை குறித்து இவ்வழக்கின் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சரிவர நிரூபணம் செய்யவில்லை. ஆகவே இவ்வழக்கின் எதிரி கடந்த 18.11.2019ம் தேதியன்று கொளிஞ்சனூர் பட்டத்தரசியம்மன் கோயில் பூட்டை உடைத்து சாமி கழுத்தில் கிடந்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்ககாலி பொட்டை திருடியதாக கூறும் விபரங்களை இவ்வழக்கின் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்களை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. ஆகவே, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்வது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. முடிவாக, இவ்வழக்கில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. இவ்வழக்கிற்காக எதிரியால் இயற்றி கொடுக்கப்பட்ட பிணைமுறி பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லையெனில் தானாகவே ரத்து ஆகிவிடும்.

19. இவ்வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள இந்நீதிமன்ற பி.ஆர்.எண்.115/2020ன் கீழ் உள்ள அ.சா.பொ.1 ஆன சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கதாலி பொட்டு இரண்டு நீதிமன்ற பாதுகாவலில் இருந்து வந்த நிலையில் அதனை இவ்வழக்கின் புகார்தாரர் சுப்பன் என்பவர் பட்டத்தரசியம்மன் கோவில் நிர்வாகத்தின் சார்பில் சி.எம்.பி.எண். 434/2025ன் கீழ் கடந்த 29.09.2025ம் தேதிய இந்நீதிமன்ற உத்தரவின் படி இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். மேற்படி தங்கத்தாலி பொட்டு இரண்டை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மேல்முறையீடு இல்லையெனில் மேற்படி பட்டத்தரசியம்மன் கோவில் நிர்வாகமே கோவிலின் சார்பாக நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.03.26 17:14:19 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 23.09.2025 | திரு. சுப்பன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 23.09.2025 | திரு. தண்டபாணி |
| அ.சா.3 | 23.09.2025 | திரு. ரங்கன் |
| அ.சா.4 | 23.09.2025 | திரு. கருப்பன் என்ற செங்கோட்டையன் |
| அ.சா.5 | 23.09.2025 | திரு. சந்திரசேகரன் |

| | | |
|---|---|---|
| அ.சா.6 | 23.09.2025 | திரு. மாதேஷ்வரன் |
| அ.சா.7 | 10.03.2026 | திரு. அம்மாசை |
| அ.சா.8 | 23.03.2026 | திரு. இளங்கோ (காவல் துறை ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 30.11.2019 | புகார்மனு |
| அ.சா.ஆ.2/அ.சா.5 | 30.11.2019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள அ.சா.5 சந்திரசேகரன் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.3/அ.சா.5 | 30.11.2019 | கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.5 சந்திரசேகரன் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.4/அ.சா.6 | 30.11.2019 | பார்வை மகஜர் ஆவணததில் முதலாவதாக உள்ள அ.சா.6 மாதேஷ்வரன் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.5/அ.சா.7 | 30.11.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6/அ.சா.7 | 30.11.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7/அ.சா.7 | 30.11.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8/அ.சா.8 | 19.12.2019 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9/அ.சா.8 | 19.12.2019 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1/அ.சா.1 | – | சுமார் 2 கிராம் எடையுள்ள தங்கதாலி பொட்டு இரண்டு |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.03.26 17:14:28 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**<u>குறிப்பு.</u>**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமினில் இருந்தார்.

2)எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM

CASE SUMMARY

CC.NO.72/2021

| Period of Remand of accused | The date of filling of the complaint/ final Report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s.228, 240, 246 and 251 of the code of criminal procedure the case maybe | Filling of all miscellaneous petition and the result including the result on challange before superior court except routine petitions like petitions U/s. 317 of the code | Date of examination in chief and cross examination of the witness | | | Date of examination of the accused U/s. 313 of the code | Date of upsconder of accused and his appearance/production as the case maybe | Grand of stay by superior court and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17.12.2019 - 14.01.2020 | 28.04.2021 | Nil | 06.12.2022 | CMP.No.4760/2019 CMP.No.4833/2019 CMP.No.903/2020 CMP.No.434/2025 MP.No.5/2026 Petitions allowed | Pws/ Dws | Chief | Cross | 24.03.2026 | - | - |
| | | | | | Pw1 | 23.09.2025 | 23.09.2025 | | | |
| | | | | | Pw2 | 23.09.2025 | 23.09.2025 | | | |
| | | | | | Pw3 | 23.09.2025 | 23.09.2025 | | | |
| | | | | | Pw4 | 23.09.2025 | 23.09.2025 | | | |
| | | | | | Pw5 | 23.09.2025 | - | | | |
| | | | | | Pw6 | 17.03.2026 | 17.03.2026 | | | |
| | | | | | Pw7 | 17.03.2026 | 17.03.2026 | | | |
| | | | | | Pw8 | 23.03.2026 | 23.03.2026 | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.03.26 17:14:37 +0530

Judicial Magistrate,
Sathyamangalam